கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்.

**O.S.No.138/2020** தேதி: **07.07.2026**

வாதி தரப்பு சாட்சி -1 (மோகனகிருஷ்ணன், த/பெ.ராம்தாஸ்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

1) எனக்கும் 2-ம் பிரதிவாதி ராஜகோபாலுக்கும் எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 2006-லிருந்து பழக்கம். 10.05.2006-ல் பவர் கொடுப்பதற்கு முன்பு எத்தனை நாட்கள் பேச்சு வார்த்தை நடந்தது என்றால் சுமார் 3 அல்லது 4 நாட்கள் கடலூர் ஆனந்த பவன் ஓட்டலில் வைத்து நடந்தது.

2) பவர் கொடுப்பதற்கு சொத்திற்கான மதிப்பான ரூ.2,00,000/- வாங்கிதான் பவர் கொடுத்தேன் என்றால் இல்லை. எந்த நம்பிக்கையில் பவர் கொடுத்தேன் என்றால் சொத்தை பார்த்துக்கொள்கிறேன் என்று கூறியதால் பவர் கொடுத்தேன். சொத்தை விற்க பவர் கொடுத்தேனா என்றால் இல்லை.

3) வா.த.சா.ஆ.2-ஆன பவர் பத்திரம் பக்கம் 3-ல் விற்க பவர் கொடுத்துள்ளேன் என்றால் அது பவர் பத்திரம் எழுதப்படும் பொதுமுறையின் படி எழுதப்பட்டது. அதில் எழுதப்பட்டுள்ள வாசகம் சரியா என்றால் பாதுகாக்க மட்டும் தான் கொடுத்தேன் விற்று பணம் எடுத்துக்கொள்ளவதற்காக இல்லை. நான் வா.த.சா.ஆ.2-ன் படி வழக்கு சொத்தை விற்க தான் பவர் கொடுத்தேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக பாதுகாப்பிற்காக கொடுத்தேன் என்று கூறுகிறேன் என்றால் இல்லை. வா.த.சா.ஆ.2-ஐ அனுசரித்து 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதிக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்றால்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.07.07 13:47:56 +0530

நீதிமனற்த்திலிருந்து சம்மன் வந்த பிறகு தான் தெரியும். அதன் பிறகு நான் பவர் பத்திரத்தை ரத்து செய்துவிட்டேன்.

4) எந்த வழக்கில் இருந்து எனக்கு சம்மன் வந்தது என்றால் அசல் வழக்கு எண்.71/2006-லிருந்து எனக்கு சம்மன் வந்தது. வா.த.சா.ஆ.5-ஆன 20.02.2015 தீர்ப்புக்கு முன்பாக வா.த.சா.ஆ.20-ன் கீழ் கிரையம் நீதிமன்றத்தின் மூலம் ஏற்பட்டுள்ளது என்றால் அது நீதிமன்றத்தை ஏமாற்றி பெறப்பட்டது.

5) வா.த.சா.ஆ.20-ஐ பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் நான் கிரையம் எழுதிக்கொடுத்த 3 மற்றும் 4-வது வாதி சொல்லி தெரியும். வா.த.சா.ஆ.20 அமலில் இருக்கும் போது என்னால் வேறு கிரையம் எழுதிக்கொடுத்திருக்க முடியாது என்றால் அசல் வழக்கு எண்.71/2006 மற்றும் மேல்முறையீட்டு வழக்கு எண்.18/ (வருடம் தெரியவில்லை) ஆகிய வழக்குகளின் தீர்ப்புரையை நான் பதிவு செய்து அதன் பிறகு கிரையம் கொடுத்தேன்.

6) ராஜகோபால் மீது 1-ம் பிரதிவாதி பிரபாகரன் வழக்கு தாக்கல் செய்த விவரம் எப்போது தெரியும் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தெரியும் அதன் பின்பு இவ்வழக்கை தாக்கல் செய்தேன்.

7) ராஜகோபாலிடம் நான் எப்போது பவர் பத்திரத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று நேரடியாக கூறினேன் என்றால் சுமார் 2011-ம் வருடம் இருக்கும். நான் பவர் பத்திரத்தை ரத்து செய்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் அதற்கான அவசியம் ஏற்படவில்லை.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.07.07 13:48:01 +0530

8) நான் ராஜகோபாலுக்கு அறிவிப்பு அனுப்பி ரத்து செய்திருந்தால் இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அதை அனுப்பாததால் தான் அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல அதனை பிராதில் குறிப்பிட்டுள்ளேன்.

9) ராஜகோபாலுக்கு நான் ரத்து செய்த விவரம் தெரியாது என்றால் சரியல்ல அவருக்கு தெரியும். அதனை அசல் வழக்கு எண்.71/2006-ல் தாக்கல் செய்திருந்தேன் அந்த வழக்கில் அவரும் தரப்பினராக இருந்தார். மேலும் அவர் கையொப்பமிட்ட ஒப்புகை ரசீது என்னிடம் உள்ளது.

10) ராஜகோபாலுக்கு வழக்கு சொத்து பாத்தியம் என்பதால் அசல் வழக்கு எண்.71/2006-வின் மேல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக A.S.18/2015-ஐ தாக்கல் செய்தார் என்றால் அவருக்கு பாத்தியம் கிடையாது, அது பொய் ஆகும். ராஜகோபால் பணம் கொடுத்து பவர் வாங்கயிதால் (Power coupled with interest) அவருக்கு வழக்கு சொத்து பாத்தியம் என்றால் சரியல்ல.

11) ராஜகோபால் எனது பவர் ஏஜென்ட் என்ற முறையில் ஏற்படுத்திய கிரைய ஒப்பந்தம் என்னை கட்டுபடுத்தும் என்றால் இல்லை, அசல் வழக்கு எண்.71/2006-ன் தீர்ப்பு உள்ளது. அந்த கிரைய ஒப்பந்தத்தை அனுசரித்து 1-ம் பிரதிவாதிக்கு நீதிமன்றம் எழுதிக்கொடுத்த கிரையம் செல்லும் என்றால் சரியல்ல, அது நீதிமன்றத்தை ஏமாற்றி பெறப்பட்டது என்னை அதில் தரப்பினராகவும் சேர்க்கவில்லை.

12) ராஜகோபால் Real Estate தொழில் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது நகைக் கடை நடத்தி வந்தது மட்டும் தெரியும். 2-ம் பிரதிவாதி 1-ம்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.07.07 13:48:04 +0530

பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஒப்பந்தத்தை மீறி கூடுதலாக பணம் கேட்டார் என்றாலும் ஆகவே தான் வழக்கு தாக்கல் செய்தார் என்றாலும் அவர்கள் இருவருக்கு இடையே இருந்த ஒப்பந்தம் பற்றி எனக்கு தெரியாது.

13) 2-ம் பிரதிவாதி வாய்மொழியாக பேசப்பட்ட கூடுதல் தொகைக்கு எழுத்துபூர்வமான ஆதாரம் இல்லாததால் அவ்வழக்கை நடத்தவில்லை என்றால் சரியல்ல நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்காக செய்த செயல் ஆகும். நான் பவர் கொடுத்துள்ளதால் 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதிக்கு கொடுத்த ஒப்பந்தம் என்னை கட்டுப்படுத்தும் என்றால் கட்டுப்படுத்தாது.

14) நான் ராஜகோபாலிடம் சொத்தை விற்ற கணக்குகளை மட்டும் தான் கேட்க முடியும் என்றால் சரியல்ல. நான் சட்ட விரோதமாக ஆதாயம் அடைவதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. 2-ம் வாதி யார் என்றால் எனது மனைவி ஆவார். 2-ம் வாதி தான் 4 மற்றும் 5 வாதிகளுக்கு வழக்கு சொத்தை விற்றார் என்றால் சரிதான்.

15) நானே விற்றிருக்கலாம் என்றாலும் ஏன் அதை எனது மனைவி பெயருக்கு எழுதி விற்றேன் என்றாலும் முதலில் அதை நான் வைத்துக்கொள்ளலாம் என்று நினைத்தேன் எனவே அதை எனது மனைவி பெயருக்கு எழுதினேன் பின்பு எனக்கு பணத்தேவை ஏற்பட்டதால் அதை விற்றுவிட்டேன்.

16) நான் கிரையம் ஏற்படுத்திக்கொடுத்த நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்காக தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2014-ல் வில்லங்கம் ஏற்பட்டிருக்கும் போது நான் பாதிக்கப்பட்டிருந்தால் பிரிவு 47-ன் கீழ் மனு தாக்கல் செய்திருப்பேன் என்றால்

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.07.07 13:48:08
+0530

அவ்விலங்கத்தை பற்றி அப்போது எனக்கு தெரியாது.

17) 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியிடம் வேலை பார்த்தார் என்பதை காண்பிக்க ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை, நான் நேரில் பார்த்து தெரிந்து கொண்டேன். 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியிடம் எந்த காலத்திலும் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல.

18) நான் பணம் எதுவும் வாங்காமல் பவர் எப்படி எந்த நம்பிக்கையில் எழுதிக்கொடுத்தேன் என்றால், எனது நண்பர் கூறியதன் பேரில் எழுதிக்கொடுத்தேன். நண்பர்கள் பெயர் என்ன என்றால் ஞாபகம் இல்லை.

19) வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என்று விளம்புகை பரிகாரம் கோராமல் நான் கோரியுள்ள மற்ற பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே இரண்டு நீதிமன்றங்கள் எனக்கு ஆதரவாக தீர்ப்பளித்துள்ளது அந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

20) 1- பிரதிவாதிக்கு கிரையம் 2014-ல் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு 2020-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் இவ்வழக்கு காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல எனக்கு நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தான் இவ்விவரங்கள் தெரியவந்தது.

21) 2014-ல் கிரையம் வில்லங்கத்தில் இருக்கும் போது 2019-ம் வருடம் பதிவு அலுவலகத்தில் உள்ள அதிகாரிகளை வசப்படுத்தி தான் கிரையம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

22) வா.த.சா.ஆ.20-ஆனது ரூ.1,00,000/- க்கு ஏற்படுத்தப்பட்டது என்றாலும்

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.07.07 13:48:11
+0530

அதற்கான சரியான நீதிமன்ற கட்டணத்தை நான் செலுத்தவில்லை என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடிக்கு அருகமானது என்றாலும் சரியல்ல, நான் சரியாகத்தான் கட்டணம் செலுத்தியுள்ளேன்.

23) நான் கோரியுள்ள மற்ற பரிகாரங்களுக்கும் சரியாக மதிப்பீடு செய்து நீதிமன்றக் கட்டணம் செலுத்தினால் நீதிமன்றத்திற்கு Jurisdiction கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு பவர் கொடுத்தது, கிரையம் ஏற்பட்டது அனைத்தும் தெரியும் என்றாலும் தவறாக ஆதாயம் காணத்தான் அதை மீண்டும் விற்றேன் என்றாலும் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று. மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.07.07 13:48:15 +0530

***Additional District Munsif , Cuddalore.***